மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: என் ஞாபகம் சரியாக இருக்குமானால்—ஏழு லாரிகள் இவர்களுக்காக ஒதுக்கி தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதாக ஞாபகம்.

திரு இரா. கருப்பையா: இன்று காலை ஒரு லாரி கூட வரவில்லை.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) பாரதியார் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1983—ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 32 (1)ஐ தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32–(1)ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.